**<u>செய்தி வெளியீடு எண்.779</u>** **<u>நாள்.3.12.2007</u>**

தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம், புதுதில்லியில் நடைபெற்ற உலக குழந்தைகள் தினவிழாவில் சென்னை, காஞ்சிபுரம்,சேலம், மதுரை, திருநெல்வேலி, தஞ்சாவூர், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் இருந்து 42 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். 14.11.2007 அன்று காலை மத்திய மனித வள மேம்பாட்டு அமைச்சர் திரு.அர்ஜுன் சிங் உலக குழந்தைகள் தினவிழா முகாமினை தொடங்கி வைத்தார்.

அங்கு நடைபெற்ற (Collage making) என்கின்ற ஒட்டோவியம் நடைபெற்றது. அனைத்து மாநில மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். இதில் தமிழகத்தைச் சேர்ந்த புதுக்கோட்டை மாணவ, மாணவிகள் முதலிடம் பெற்றனர்.

19.11.2007 அன்று சிறப்பு நிகழ்ச்சியாக மறைந்த முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி அவர்களின் பிறந்தநாள் விழாவில் மரம் நடப்பட்டது. அன்று Sustainable Development பற்றி பேச்சுப்போட்டி நடத்தப்பட்டது. இப்போட்டியில் திருநெல்வேலி சவகர் சிறுவர் மன்ற மாணவன் சுகுமாறன் ஊக்கப்பரிசு பெற்றார்.

20.11.2007 அன்று நிறைவு விழாவில் 14.11.2007 முதல் 18.11.2007 வரை புகைப்படம் எடுக்கும் போட்டி நடத்தப்பட்டது. இதில் புதுக்கோட்டை சிறுவர் மன்றத்தைச் சேர்ந்த பிரபாகரனுக்கு மூன்றாம் பரிசாக டிஜிட்டல் கேமரா பரிசாக வழங்கப்பட்டது.

வெ.இறையன்பு
அரசு செயலாளர்
சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.